திரு. து. புருஷோத்தமன்: கிண்டி தொழிற்பேட்டையிலுள்ள சூரியகாந்தி எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை சைதைத் தொகுதியில் இருக்கிறது. அதை விரிவுபடுத்தும் வகையில் அரசுக்கு ஏதாவது திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இப்போது உத்தேசம் இல்லை.

திரு பெ. சு. திருவேங்கடம்: சூரியகாந்தி எண்ணெய் எதையும் தாங்கும் இதயம் வேண்டுமானால் தேவை என்று சொன்னார்கள். ஏற்கனவே மறைந்த பெரியவர் சி. பா. ஆதித்தனார் அவர்கள் வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்தபோது அதிகமான அளவுக்கு சூரியகாந்தி பயிரிட முயற்சி எடுக்கப்பட்டது. அந்த அளவுக்கு தற்சமயம் அதிலே ஊக்குவிக்கப்படவில்லை என்று அறிகிறேன். ஆகவே, வேளாண்மை மறுமலர்ச்சியை ஏற்படுத்தி அதிகமான சூரியகாந்தியை உற்பத்தி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத்தான் மூலக் கேள்விக்கான பதிலிலேயே குறிப்பிட்டேன். விவசாயிகளுக்குத் திருந்திய சாகுபடி முறைகள் கண்கூடாகச் செய்து காட்டி பாத்திகள் அமைப்பது பற்றியெல்லாம் எடுத்துக் கூறப்படுகிறது. மானியத் தொகை கொடுக்கப்படுகிறது. புதிய ரகங்களைச் சாகுபடி செய்யவும், செயல் விளக்கப் பாத்திகள் என்ற முறையில் சூரிய காந்தியை உற்பத்திச் செய்ய தரமான விதைகளைக் கொடுக்கவும் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. டன் ஒன்றுக்கு 300 ரூபாய் வீதம் மானியம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

பரமக்குடிலுள்ள விதைப்பண்ணை.

*வினா எண் 89—திரு. செ சிவசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார—

(அ) பரமக்குடியிலுள்ள விதைப்பண்ணையில் என்னென்ன விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன?

(ஆ) இப்பண்ணை இலாபகரமாக நடக்கிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து; (அ) இப்பொழுது பல பயிர் பரிசோதனை நிலையம் ஒன்று 14-11-78 முதல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) பரிசோதனை நிலையங்களில், லாப நஷ்டக் கணக்கு போட இயலாது.

திரு. செ.சிவசாமி: தலைவர் அவர்களே, பரமக்குடியிலே உள்ள விவசாயப் பண்ணையிலே வருஷம் முழுவதும் பெரும் பகுதியில் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எந்த எந்த நிலையில் விவசாயம் எந்த அளவிற்கு அபிவிருத்தி அடைந்திருக்கிறது? அந்தப் பண்ணையை டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் எப்போதாவது இன்ஸ்பெக்ட் செய்திருக்கிறார்களா?

1981 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அது பண்ணையல்ல. 18-10-78 முதல் பரிசோதனை உப நிலையமாக மாற்றப்பட்டிருக்கிறது. பரிசோதனையிலே இழப்பு, ஆதாயம் என்று கணக்குப் போடுவதில்லை. இதிலே நடைபெறுகின்ற சோதனை மூலம் நல்ல பலன்கள் கிடைத்து வருகின்றன. இந்தப் பரிசோதனையின் ஆராய்ச்சியின் பயனாக ஒட்டுச் சேர்க்கப்பட்ட பயிர் வகை என்ற முறையில் பி. எம். 1121 என்கின்ற வளர்ப்பு தற்போது மானவாரி முறையில் அதிக மகசூல் தருகிற டி. கே. 9 என்ற தனி ரகத்தைவிடச் சிறந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, அந்தப் பண்ணையில் பார்மர்ஸ் டிரெயினிங் சென்டர் ஒன்று ஏற்படுத்துவதற்காக கட்டடம் கட்டுவதற்கு புரப்போஸல் அரசுக்கு வந்திருப்பதாகத் தகவல் கிடைத்து இருக்கிறதா? ஆம் எனில் அது குறித்து மேல் ஏற்பாடுகள் செய்வார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அப்படி வந்திருந்தால் அரசு அதுகுறித்து மேல் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, பரமக்குடியிலே உள்ள விதைப்பண்ணை பற்றி அமைச்சர் அவர்கள் பெருமையாகச் சொன்னார்கள். புதிய நெல் வகைகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் மத்திய வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்கள் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு விவசாயம் செய்யத் தெரியவில்லை என்றும் பஞ்சாபிலே உள்ள விவசாயிகள் சிறப்பாகச் செய்கிறார்கள் என்றும் சொன்னார்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதைப் பண்ணையிலே ராவ் பிரேந்திர சிங் அவர்களைக் கொண்டுவந்து நிறுத்தினால் என்ன செய்வது? அது வேண்டாம்.

திரு. ப. நெடுமாறன்: பரமக்குடி விதைப்பண்ணையிலே உள்ள ஆராய்ச்சியாளர்களை பஞ்சாபிற்கு அனுப்பி, அங்கே உள்ள முறைகளை அறிந்து வருவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகள் செய்வார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: விவசாயத்தைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு கற்றுக் கொடுக்க வேண்டிய நிலையில் தான் இருக்கிறதே தவிர கற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இல்லை.

திரு. ந. குலசேகரபாண்டியன்: தமிழகத்திலே இதுபோன்ற விதைப் பண்ணைகள் எத்தனை இருக்கின்றன? மாவட்டத்திற்கு ஒரு விதைப் பண்ணை என்ற முறையில் நிறுவ அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தனிக் கேள்வி போட வேண்டும்.